தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் ௫௪	திருவள்ளுவர் யாண்டு ௨௦௧௧ இரெளத்திரி ஆடி 1980 ஜூலை - ஆகஸ்டு	மலர் ௩

ஆய்தம் என்னும் முப்பாற்புள்ளி

பேராசிரியர் ச. பாலசுந்தரம்

(துணர் 54, மலர் 3. பக்கம் 51/56ன் தொடர்ச்சி)

ஆசிரியர் நூல் செய்த காலத்து ஆய்த அளபெடை உண்டா, இலக்கிய வழக்கு உண்டா, என்றெல்லாம் எண்ணிப்பாராமல் பிற்கால வழக்குகளை நோக்கி நச்சினார்க்கினியர் இவ்வாறு உரை காணுவாராயினர். பிற்கால இலக்கியங்களில் அல்லாமல் தனிச் செய்யுட்களுன் அருகிக் காணப்பெறும் இவ் ஆய்த அளபெடையைக் கொள்ளவேண்டின்

" ஒற்றள பெடுப்பினும் அற்றென மொழிப "

என்னும் நூற்பாவின்கண் உரையிற் கோடலாற் கொண்டிருக்கலாம். அன்றிப் புதியன புகுதலாகவும் ஏற்றிருக்கலாம். இவ்வாறு செம்மையான நூற்பாக்களை எல்லாம் வலிந்தும் நலிந்தும் கொண்டு கூட்டிப் பொருள் காணபது, அதன் பயன்மிக்க உண்மைப்பொருளை இழப்பதோடு காலமலைவும் — வரலாற்றுப் பிழையும் நேர்தற்குக் காரணமாதலை அறிஞர் உலகம் எண்ணுதல் வேண்டும். இனி

சுப்பிரமணியசாத்திரியார் உரை :- ஆய்தம் சுருங்காத இடத்து ஏனைப் புள்ளியெழுத்துக்களின் தன்மையுற்று உருவம், இசை மொழியாற் குறிக்கப்படும் பொருள் எல்லாவற்றின்கண்ணும் சிறு பான்மையாய்த் தோன்றும். என்பது, இவ்வுரை நச்சினார்க்கினியத்தைத் தழுவியதென்பது தெளிவு.

வேங்கடராசுலு ரெட்டியார் இந்நூற்பாவிற்கு இரண்டு வகை உரைகூறி மேலும் ஆராய வேண்டுமென்று முடிக்கின்றார் அவற்றுள்

முதல் உரை :— உருவின்கண்ணும் இசையின்கண்ணும் சிறு பான்மையவாகத் தோன்றுகின்ற மொழிக்குறிப்புக்கள் எல்லாம் பிற எழுத்தானியலா, ஆய்தம் அஃகாக் காலத்து: எனவே குறிப்பு மொழிகளுக்கு ஆய்தம் இன்றியமையாததாகும் என அதன் ஆவசியகத்தைத கூறியவாறாயிற்று என்பது.

இரண்டாவது உரை :— ஆய்தம் அஃகாக்காலை எழுத்தின் இயலா, எனவே ஆய்தம் அஃகியகாலையே எழுத்தின் இயலும். ஆகலின் உருவின் கண்ணும் இசையின் கண்ணும் வரும் ஆய்தம் அஃகியதாகும் எனக்கோடலும் அமையும். அவ்வாறு கொள்ளின் உருவுபற்றியும் இசைபற்றியும் வரும் குறிப்பு மொழிகளில் வரும் ஆய்தம் குறுகியதாகும், இவற்றை மட்டுமே ஆய்தக் குறுக்கம் எனலாம். என்பது,

இனி இவர்தம் முதலுரையின் கருத்து ஆய்தத்தை இன்றியமையாத சொற்களைப்பற்றிக் கூறுவது இந்நூற்பாவின் நோக்கம் என்பதாகின்றது இஃது ஆசிரியரை மற்றொன்று விரித்தல் என்னும் குற்றத்திற்கு ஆளாக்குகிறது. இரண்டாவது உரை ஆய்தம் சுருங்கி ஒலிக்கும் மொழிகளில் ஆய்தமிட்டு எழுதவேண்டா எனவும் அவையாவன உருவும் இசையும் பற்றி வரும் குறிப்புச் சொற்கள் எனவும் விதிப்பதாகக் கருதியதாகின்றது. இவ்வுரையும் அக்குற்றத்தின்பாற் படுத்துவதேயாம். மேலும் இவ்வுரையால் கஃறு, சுஃறு என்னும் குறிப்பு மொழிகளை ஆய்தமிட்டு எழுதாமல் கர்ர்ர் — சுர்ர்ர் என்றாற்போல எழுதவேண்டுமென்பது இவர் கருத்தெனப் புலனாகின்றது. எனினும் இவர் எடுத்துக்காட்டு ஒன்றும் தந்திலர். மேலும் 'ஈறியல் மருங்கினும் இசைமை தோன்றும்' என்னும் நூற்பா ஆய்தக்குறுக்கம் பற்றி எழவில்லை. ஆய்தக் குறுக்கத்திற்கு விதி இந்நூற்பாவாயிலாகக் கொள்ளலாம் என்பதும் இவர் கருத்தெனத் தெரிகிறது. இவ்வுரைகளின் பொருத்தமின்மையை விளக்கப்புகின் மிக விரியுமாதலின் அறிஞருலகம் தேர்ந்துணர்வதாக.

மற்று ஆசிரியர் ஆய்த எழுத்து தனது அரை மாத்திரையினும் சிறிது நீண்டிசைக்கும் என்பது பற்றி இந்நூற்பாவிற் கூறுவதைத் தவிர யாண்டும் இஃது அரைமாத்திரையினும் குறைந்து இசைக்கும் என்பதுபற்றிக் கூறினாரிலர். இதன் இலக்கண நிலை இவ்வாறிருக்கும்போது ஆய்தம் குறுக்கம் என்பதோர் முயற்கொம்பைப் படைத்துக்கொண்டு அதற்குக் குப்பாயம் செய்ய உரையாசிரியன்மார் முற்பட்டு இடர்ப்படுவதை எண்ணும்போது வியப்பாக உளது,

இனி இக்காலை வளர்ந்து மண்டிவரும் மொழியியல் முறையில் இவ்வாய்தத்தின் நிலையென்ன என்பதையும் இஃதோர் தனித்த (Phoneme), எழுத்தொலியா அல்லது பிறிதோரெழுத்தின் (Allophone) மாற்றொலியா அல்லது வேறோரெழுத்தின் ஓசையைத் திரிபுபடுத்தும் துணை ஒலியா என்பதையும் இதன் தோற்றத்திற்குக் காரணம் யாதென்பதையும் பற்றிச் சிறிது காண்போம்,

தொல்காப்பியரும் ஏனைய தமிழ் இலக்கண நூலாசிரியன்மாரும் ஆய்தத்தை ஒரு சார்பெழுத்தாகவே கொண்டு அஃது எவ்வெம் முதலெழுத்துக்களைச் சார்ந்து வருகின்றதோ அவ்விரு எழுத்தொலி களையும் சார்ந்து ஒலிக்குமென்றே கூறியுள்ளனர் என்பதை முன்பு கண்டோம். இதன் ஒலியை மொழியிடை வைத்தன்றித் தனித்து ஒலித்துக்காட்ட இயலாது. ஆதலின் இதன் முன்னும் பின்னும் சாரியை கொடுத்து அஃகனம் (அஃகன்னு) எனவழங்குவர்.

மற்று உயிரெழுத்தின் சார்பின்றித் தனித்தொலித்துக் காட்ட இயலாத மெய்யெழுத்துக்களை வலி மெலி இடை எனச்சுட்டியுள்ள மையின் மெய்யெழுத்துகளுக்குத் தனியேயும் ஓசை உண்டென் பதனை இலக்கண நூலார் உணர்ந்து கொள்ளவைத்துள்ளனர்.

இவ்வகையால் ஆய்தத்தின் சிறப்பொலியை நாம் உய்ந்து ணருமாறு எவ்வாறு? "நலிபுவண்ணம் ஆய்தம் பயிலும்" என்னும் நூற்பாவாயிலாகத் தொல்காப்பியர் மட்டும் இதற்குரிய ஒலி நலிபு ஒலிஎனக் குறிப்பாகப் புலப்படுத்தியுள்ளார். ஏனையோர் வாளா சென்றனர்.

இற்றை மொழியியல் நோக்கில் இந்நலிபொலி எதனுள் அடங் கும் என்பதையும் இலக்கிய, இலக்கண ஆசிரினன்மார் இதனை எவ்வாறு ஆண்டுள்ளனர் என்பதையும் இனிக்காண்போம்.

இவ் ஆய்தம் இருவகை வழக்கிலும் "அஃறிணை - பஃருழிசை,- பஃறொடை, — அஃகும், — மஃகான், — றஃகான் பஃது, — ஒன்பஃது அஃதான்று கஃறீறு—முஃடீது அஃது— இஃது—எஃது வெஃகாமை— விலஃகி இலஃகு—செய்வஃதே—கஃடு றென்னும்; சுஃஃறென்னும்" என்றாற் போன்ற சொற்களிற் பயின்று வருதலைக் காணலாம்.

இவ்வாறு பயின்றுவரும் இதன் ஒலி சமற்கிருதத்திலுள்ள 'ஹ' ஒலியைப் போன்றும் ஆங்கிலத்தில் உள்ள H ஒலியைப் போன்றும் ஒலிப்பதாகச்சிலர் கருதுகின்றனர். கால்டுவெல் இதனை உள்ளண்ண ஹகர ஒலி எனக் கூறுவார் கஃறு — சுஃறு என உருவினும் இசை யினும் வரும் குறிப்புச் சொற்களின் ஒலி கர்ர்—சுர்ர் என இடையின ரக ஒலி போன்றும் அஃதை — கஃசு என்பவை அகுதை—கசுசு எனவும் இவற்றுள் கஃசு என்பது கைசு—கய்சு எனவும் ஒலிக்கப் பெறுதலின இவற்றுள் இவ்ஆய்தம் முறையே உ-இ-ய் ஒலி போன்றும் ஒலிக்கப்பெறுவதாகக் கொள்கின்றனர்.

இனி யாப்பருங்கல விருத்தியுள்

ஆய்தமும் வவ்வும் அவ்வொடுவரினே
ஐயென எழுத்தொடு மெய்பெறத் தோன்றும் என ஓர்

அவிநயச் சூத்திரம் காணப்படுகின்றது. அதற்கு கஃசு>கைசு — கஃதம் > கைதம் (கய்தம்) என எடுத்துக்காட்டுகளும் தரப்பெற்றுள்ளன. இவற்றால் ஆய்தம் யகரத்தின் மாற்றொலியாகக் கருதப் பெற்றதெனக் கூறுகின்றனர் சிலர், மேலும் உ. வே, சாமிநாத ஐயர் தம் நன்னூற் பதிப்பில்.

'' அம்முன் இகரம் யகரம் என்றிவை
எய்தின் ஐயொத் திசைக்கும் ....'' என்னும்

நூற்பாவின் அடிக்குறிப்பில் இந்நூற்பாவிற்கு
'' அம்முன் இகரம் ஆய்தம் என்றிவை
எய்தின் ஐயொத்திசைக்கும் ''...... என்பதொரு

பாடவேறுபாடு மிதிலைப்பட்டி அழகிய சிற்றம்பலக்கவிராயர் வீட்டுச் சுவடியிலும் வேறு சில சுவடிகளிலும் இருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார் இவையேயன்றி

எஃகுடை வலத்தர் மாவொடு பரந்தரக்
கையின் வாங்கித் தழீஇ [புறம் 274]

வைகல் யாணர் நன்னாட்டுப் பொருநன்
எஃகுவிளங்கு தடக்கை இயல்தேர்ச் சென்னி [புறம் 61]

செய்க பொருளை செறுநர் செருக்கறுக்கும்
எஃகதனிற் கூரிய தில் [குறள் 756]

அஃதே யுய்யப் புகுமாறென்று கண்ணன் கழல்கள்மேல்
கொய்பூம் பொழில் சூழ் குருகூர்ச் சடகோபன் குற்றேவல்
செய்கோலத் தாயிரம் சீர்தொடைப் பாட லிவைபத்தும்
அஃகாமற் கற்றவர் சூழ்துயர் போய் உய்யற் பாலரே
[திருவாய்மொழி]

அஃதே அடிகளும் உளரோ என்றாற் கருளுமாறு
இஃதே இருந்தவா றென்றூர்க் கென்னைப் பெற வல்லார்க்கு
எய்தா இடகுளவே எங்கெங்கென் றத்திசை நோக்கி
வெய்தா அடிதொழுது வேந்தன் கோயிற் கெழுந்தானே
[சிந்தா—1884].

அஃதைய நினையெமது ஆணை உடையேம்
இஃதொரு பொருளல எமதுயி குடனேழ்
மகிதல முழுவதையும் உறுகவம் மலரோன்
உகுபக லளவென உரைநனி பகர்வார் [கம்பர்]

எனச் சங்க இலக்கியம் முதலாய சான்றோர் செய்யுட்களில் யகரத்தோடும் ககரத்தோடும் ஒத்து எதுகையாகி வருதலின் யகரத்திற்கு ஆய்தம் மாற்றொலியாகலாம் எனக்கருதுவோர் சிலர்.

ஈண்டுச் சார்பெழுத்துக்களின் தோற்றம் பற்றிக் குற்றியலிகர ஆய்வுரையின்கண் யான் கூறியவற்றை நினைவுபடுத்திக்கொள்வது நலம். அஃதாவது

முதலெழுத்து முப்பதனுள் தமக்கென ஒலியுடையவை பன்னிரண்டு உயிரெழுத்துக்கள் மட்டுமேயாம், இப்பன்னிரண்டனுள் அடிப்படை ஒலி எழுத்துக்கள் அ. இ. உ. இம்மூன்றுமேயாம் இம்மூன்றற்கும் மூல ஒலி பைசந்தி நிலையில் நாதமாத்திரையாகத் தோன்றிவரும் அகரமாகும். தத்துவநூலார் இவ் அகரத்தை அகப்பாட்டொலி என்பர். இவ்வொலி தனக்குப் புலனாவதன்றிப் பிறர்க்குச் செவிபுலனாகாது. இம்மூல ஒலியாகிய அகரம் பிறர்க்குச் செவிப் புலனாகுமளவில் வெளிப்படின் அஃது புறப்பாட்டொலியாகிய அகரமாம் இவ் அகரமே உயிர் எழுத்துக்களின் வரிசையில் முதலாக நிற்பதாகும். திருவள்ளுவர் கூறும் ''அகர முதல எழுத்தெல்லாம்'' என்பதனுள் சுட்டப்படும் அகரம் உயிர் வரிசையில் முதல் நிற்கும் அகரக் குற்றெழுத்தன்று - முற்கூறிய அகப்பாட்டொலியாகிய அகரமாகும் [இதனை விரிக்கிற்பெருகும்]

இம்மூல ஒலியாகிய அகரம் வாய் அங்காந்த அளவில் செவிப் புலனாக வெளிப்படின் அகர உயிரெழுத்தாயும் வாயிதழ்கள் சிறிது விரியப் பிறந்து வெளிப்படின் இகர உயிராயும் வாயிதழ் சிறிது குவியப் பிறந்து வெளிப்படின் உகர உயிராயும் நிற்கும். ஆக இம்மூன்றும் அகரத்தின் கோணங்களே என்பது தெளிவு. எகர ஒகரங்கள் இகர உகரங்களின் மறு கோணங்களாகும் ஆ. ஈ. ஊ. ஏ. ஓ இவை அவற்றின் மாத்திரை நீட்சியால் வருவன. ஐகார ஔகாரங்கள் முறையே ஆகாரம் இதழை நோக்கி விரித்தும் குவிந்தும் சுருங்கி எழும் அலை வொலிகளாகும் இவற்றின் விளக்கத்தை தொல்காப்பியமும் உயிரெழுத்துக்களும் என்னும் எனது கட்டுரையிற் தெளியக் காணலாம்.

ஆக அடிப்படை ஒலியாகிய அ. இ. உ மூன்றும் உயிர்த்தன்மை கெடாமல் அலியைப்போலத் தன் மாத்திரையிற் சுருங்கி மெய்யெழுத்தியல்பினை எய்தும் நிலையில் அரைமாத்திரை யளவாய்ச் சார்பெழுத்து என்ற நிலையை எய்துகின்றன.

இவ்வடிப்படையில் குற்றியலிகரம் இகர உயிரின் சார்பாகவும் குற்றியலுகரம் உகர உயிரின் சார்பாகவும். ஆய்தம் அகர உயிரின்

சார்பாகவும் நிற்றலே ஓர்ந்துணரலாம். அகர உயிர் ஏனை இரே உகரக் கோணங்களாக நிற்பதைப் போலவே அகரத்தின் சார்பாகிய இவ் ஆய்த எழுத்தும் குற்றியலிகரக் குற்றியலுகரக் கோணங்க ளாகி ஒலிக்கும் இந்நுண்மையை உணர்ந்த தொல்லாசிரியன்மார் அகரச்சார்பாகிய ஆய்தத்தை முன்வையாமல் குற்றியலிகரக் குற்றியலுகரங்களை இஃது அடக்கி நிற்பது தோன்ற இறுதியில் வைத்து வரிசைப்படுத்தியுள்ளனர். இதனாற்றான் இதனை முப்பாற் புள்ளி என்று பெயர் கூறி வரிவடிவிலும் முக்கோண்மாக அமைத் துள்ளனர். இந்நுண்மைகளை மெய்ப்பொருளியல் நோக்கிற் கண்டலான்றி உண்மை புலனாகாதென்க.

மற்று ஒலியாவது ஒன்றே என்பதும் அவ்வொலியின் திரிபு களையே பலவாக எண்ணித் தொகை கொள்ளப்படுகின்றதென்பதும் அறிவியலுண்மையாம். ஒலித்திரிபுகள் யாவும் எழுத்து ஒலிகளாகக் கொள்ளப்பெறுவதில்லை. கிளையும் துணையுமாக ஒலிப்பவனவற்றை ஏற்றப்பெற்றி ஓரொலியா அமைத்துப் பலவற்றைச் சிலவற்றுள் அடக்கி எழுத்தொலிகளாகக் கொள்ளப்படுகின்றன. பண்இசை எண்ணற்றனவாக நிகழினும் அவையாவும் ஏழு சுரங்களில் அடங்கி நிற்பதைப் போலவே தமிழியற் சான்றோரும் தமிழ் மொழி யில் வழங்கப்பெறும் ஒலிகளை முப்பத்துமூன்று வகையுள் அடக்கி அவற்றை எழுத்தொலிகளாக எண்ணி அமைத்தனர்.

ஆதலின் ஓரெழுத்தின்கண்ணே பல ஒலிக் கூறுகள் திரிந்து வெளிப்படும். எடுத்துக்காட்டாக வங்கம்—தஞ்சம்—பிண்டம்—அந்தம்—கம்பம்—மன்றம் எனவரும் சொற்களில உள்ள கசடதபற வாகிய வல்லெழுத்துக்கள் வன்மை குறைந்தும் கொக்கொக்க கிட்டிட்ட என்றாற்போலவரும் சொற்களில் உள்ள வல்லெழுத்துக் கள் வன்மைக்கும் திரிந்தொலிப்பதைக் காணலாம் இவ்வாறு சிறிது வேறுபடினும் அவை வல்லெழுத்தாகிய ஓரொலியாகவே கொள்ளப்படும் அவ்வாறே

கஃசு—பஃறி — எஃகு—அஃது — வெஃகா—கஃறீது — முஃடீது என்னும் சொற்களுக்கிடையில் சிறுசிறு வேறுபாட்டோடு வரும் ஆய்த எழுத்தையும் ஓரெழுத்தாகவே கொள்ளுதல் முறையாம். இவற்றையெல்லாம் தனித்தனியாக எண்ணப்புகின் ஓரெழுத்தே ஒலிப்பவர்தம் குரலொலிக்கு ஏற்ப மாறுபடுவதை எண்ணிக் கணக் கிடல் வேண்டும் அஃது இயலாதது மட்டுமன்று மொழியமைப்பறி வியலுக்கு முரணானதுமாகும்.

இனி ஆய்தம் யகரம் போல ஒலிப்பதற்கும் எதுகையாக வரு வதற்கும் உரிய காரணத்தைச் சிறிது காண்போம். உலகவழக்கில்

எஃகு என்னும் சொல்லை Egge—Eku—Ekku—Ehu—Ehhu எனப் பலவாறு உச்சரிக்கப்படுவதைக் கேட்கிறோம். அஃகேனம் என்பதை மாணவச் சிறுர் அஃகேன அக்கேன அஃன்னா ன உச்சரிப்பதைப் பார்க்கிறோம் அஃது இஃது என்னும் ஆய்தம் விரிந்த சுட்டுப் பெயர்களை அஹ் இஹ் என வடமொழி விசர்க்கத்தைப், போலச் சிலர் ஒலிக்கின்றனர். சில வட்டாரங்களில் அய்து—இய்து எனவும் சிலர் ஒலிக்கின்றனர். இவற்றை எல்லாம் மாற்றொலியனாகக் கொள்ளுதல் இல்லை. கொள்ளின் அது பிழையானதொரு வழியைத் தோற்றுவிப்பதாகும்.

இனி அஃது—இஃது எனவரும் சொற்கள் சில வட்டார வழக்கில் அக்அது—இக்இது எனவழங்குதலை எஃகு செவியால் கேட்கலாம். இவை நாளடைவில் ககர ஒலி குன்றி அஅது இஇது என ஒலிப்பது இயல்பு. இவ்வழக்கே பின்னர் ஆது ஈது என மருவி வந்துள்ளது. பகல்=பால் பகுதி=பாதி நிகர்=நேர் துகள்=தூள் என்றுற்போல இணைக்குறிலசை ஒரு நேரசை நெடிலாக மாறுவது மொழியியல்பேயாகும் அஅது இஇது என்பவற்றுள் வரும் இணைக்குறில் இரண்டும் உயிர்த்தலின் ஒரு நெடிலாக மாறுவதன்றிச் சிறு பான்மை இரண்டாவது உயிர் உடம்படு மெய்யாக மாறி அவ்து இய்து என ஒலித்தலும் இயல்பே. யாஅது என்பது யாவது எனவும் யாவர் என்பது யார் எனவும் திரியுமெனத் தொல்காப்பியம் கூறுவதனை நோக்கின் இவ்வுண்மை புலனும்.

எனவே வட்டார வழக்கில் ஒலிப்பவர்தம் முயற்சியால் அஃது இஃது என்பவை அய்து-இய்து என வருதலின் ஆய்தம யகரம்போல ஒலிக்கப்படுகின்றதென்பதை உணரலாம். ஆய்தம் உயிரொலியின் சார்பாய் மிடற்று வளியால் பிறப்பதாகலின் மிடற்று வளியால் பிறக்கும் அரை உயிராகிய யகர வகர ஓசையைப் பெறுதல் இதன் இயல்பேயாம். இவ் ஒற்றுமையால் கஃசு கய்சு என்வும் இகர யகரம் போலி வகையால் 'கைசு' எனவும் உச்சரிக்கப்படுகின்றதேயன்றி ஆய்தம் யகரத்தின் மாற்றொலியனாகாது என்பது பெறப்படும் இப்பிறப்பிட ஒற்றுமை காரணமாகவே அவ்கடிய என்னும் புணர் மொழியுள் வகரம் ஆய்தமாகத்திரிந்து அஃகடிய எனவருகின்றதென்பதை ஓர்ந்துணரலாம்—

இனி எஃகு என்பது நுணுகுதல் என்னும் பொருளிற் கூர்மையை உணர்த்தி நிற்கும். அஃகு எனபதும் சுருங்குதல் என்னும் பொருளிற் கூர்மையை உணர்த்திநிற்கும். எஃகு என்பது ஆகுபெயராய்க் கூர்மையாக்கப்பெற்ற வாள்—வேல்—வாளி முதலாய கருவிகளை உணர்த்திவரும். இதனை ஓராமல் எய்கு என்பது எஃகு என வந்த

தாகக் கருதி ஆய்தத்தை யகரத்தின் மாற்றொலியனாக முன்னோர்கள் கொண்டிருக்க வேண்டும் என ஒருசாரார் கருதுவது சிறிது பொருந்தாதென்க. ஒருவன் தன் வயிற்றைச் சுருக்குதலை எஃகினன் என வழங்குதலையும் ஓர்க.

இக்குழப்பங்களுக்கும் திரிபுகளுக்குங் காரணம் தத்தம் சமயங்களைப் பரப்பும் குறிக்கோளால் முயன்று தமிழ் பயின்று தமிழிலக்கண வழிநூல் செய்த நன்னூல் சின்னூல் தொன்னூல் ஆசிரியன்மார் தமிழ்மொழியின் அறிவியல் மரபுகளை ஓராமல் தொல்காப்பியத்திற்குப் பன்னூறாண்டுகள் பிற்படத் தோன்றிய உரையாளர் கருத்துக்களையும் செயற்கை மொழியாகி சமற்கிருதக் கோட்பாடுகளையும் இழிவழக்கு மரூஉ வழக்கும் பிழைவழக்குமாக நிலவும் வட்டார வழக்குக்களையும் சொல் நுட்பமறியாமல் ஓசை நுட்பமொன்றையே கருதிச் செய்யப்பெற்ற பிற்காலச் செய்யுள் இலக்கியங்களையும் மேற்கொண்டு அவற்றிற்கு விதி வகுத்தமைக்கப்புக்கமையேயாம். இத்தகையோர் கால்வழியினரும் சார்பினரும் இன்றும் உளர். என்றும் உளராவர். இஃதுலகியற்கை.

இனிப் புறநானூறு—திருக்குறள் முதலாய சான்றோர் இலக்கியங்களுள் ஆய்தமும யகரமும் எதுகைத் தொடையில் வந்தமைந் திருப்பதற்குரிய காரணத்தைக் காண்போம்.

செய்யுள் உறுப்புக்களுள் தொடை என்பது இன்றியமையாத இனியதோர் உறுப்பாகும். இவ்வுறுப்பு செய்யுளுள் ஓசை நயத்தை உண்டாக்கவும் சீர்களையும் அடிகளையும் வரையறை செய்யவும் பயன்படுதலின் இதனைப் பலபடியாக விரித்து யாப்பியல் வல்லார் அமைத்துக்கொண்டனர்.

அவற்றுள் எதுகைத் தொடை தலையாகு எதுகை — இடையாகு எதுகை — கடையாகு எதுகை என்பன பெரும் பிரிவாகும். இவை ஒவ்வொன்றும் பலவாறாக விரியும் இவற்றுள் கடையாகு எதுகையுள் உயிரெதுகை — இன எதுகை — வருக்க எதுகை ஆசெதுகை முதலாய பல உள. இவ்வாறு எதுகைத் தொடையைப் பெருக்குதற்கு சில எழுத்துக்களை இனை எழுத்தாக வகுத்து அவற்றை இன எழுத்துக்கள் எனக்கொண்டனர் (சமற்கிருதம் இதனை அநு என்னும்) அவையாவன.

அ ஆ ஐ ஔ	இவை ஓரினம்	தனித்தும்	மெய்யோடு கூடியும்	வரும்
இ ஈ ஈ எ	,,	,,		,,
உ ஊ ஒ ஓ	,,	,,		,,
ஞ. ந.	,,	,,	இவை உயிரோடு கூடியே வரும்.	
த. ச.	,,	,,	,,	
ம. வ.	,,	,,	,,	

இவைபற்றி நூலாசிரியன்மார் விதந்து கூருவிடினும் இலக்கியங்களை ஆய்ந்து உரையாசிரியன்மாரால் இவை கூறப்பெற்றுள்ளன. இவையேயன்றி ச-ஞ. ய-ஞ, ய-ஃ போன்றவையும் சான்றோர் இலக்கியங்களில் வருகின்றன. இவ்வகையில் ஒராற்றான் ஒசை ஒற்றுமையுடைய யகரத்தோடு அய்தம் (அநுவாக) எதுகைத் தொடையில் வந்துள்ளதெனக் கொள்ளல் வேண்டுமேயன்றி மாற்றொலியனாகக் கருதுவது திரிபுணர்ச்சியாகும் என்க.

இனி ஆய்தம் குறியதன் கீழதாய் வல்லெழுத்தாறன் மேலதாய் வருதலின் இதனை இரட்டித்த வல்லெழுத்தின் மாற்றொலியன் எனச் சிலரும், இஃதோர் வகையொலி எனச் சிலரும், தகரம் வரும் வழிக் குறிற்கீழ் நிற்கும் 'லள'க்களும் வல்லெழுத்து வருவழிச் சுட்டின் கீழ் நிற்கும் வகரமும் ஆய்தமாகத் திரிதலின் ஆய்தம் ல ள வ இவற்றின் மாற்றொலியன் எனச் சிலரும் கருதுகின்றனர்.

இவர்தம் ஆய்வுரைகள் தனிமொழிக்கண்ணும், புணர்மொழிக்கண்ணும் நிற்கும் ஆய்தத்தின் நுணுகிய ஒலி வேறுபாடு காரணமாக எழுத்தவையாம்.

சார்பெழுத்துக்கள் எஞ்ஞான்றும் யாண்டும் தனித்தொலியா; குறித்த பிறமுதலெழுத்துக்களைச் சார்ந்தே ஒலிக்கும் எனத் தெளிவாகத் தொல்காப்பியம் வலியுறுத்துவதையறிந்திருந்தும் இவர்கள் இதன தனி ஒலி (தன்மை) யாதெனக் காண முயன்றது வியப்பே. இஃதொறு முடிவுபோகா முயற்சியேயாகும். என்னையெனின், இவ் ஆய்த எழுத்தேயன்றி முதலெழுத்துக்களுள் சிலவும் முன்பின் வரும் எழுத்துக்களால் ஒலி வேறுபாடுதலைக் காணலாம்.

எடுத்துக்காட்டாக,

திங்கள்—மஞ்சள்—கொண்டல் — பந்தர்—கம்பர்—மன்றம் என்பனவற்றுள் உள்ள கசடதபறக்களின் ஒலி சமற்கிருத வியஞ்சன [மெய்] வருக்க மூன்றும் எழுத்துக்களை ஒத்து ga—ja—da—dha—ba—ra எனவும்,

செய்க—சேர்க — வெல்க—வாழ்க—கொள்க, என்பனவற்றுள் உள்ள ககர ஒலி வடமொழி ஹ எழுத்தை ஒத்து ha எனவும் ஒலி பெறுதலைக் காணலாம். இவையெல்லாம் தமக்கு முன் வந்த மெல்லின இடையின மெய்களின் சார்பால் நேர்வனவாம் மற்று வல்லெழுத்துக்கள் தம்மேல் ஏறிய உயிர்க்குப் பின் வரும் மெய்களாலும் ஒலி வேறுபடுவதை அக்கை—அங்கை—அல்கை எனவரும் சொற்களிற் காணலாம்.

பகுத்தான் — பகுந்தான், இசைத்தான் — இசைந்தான், படித்தான்—படிந்தான் ஒதுக்கினன் — ஒதுங்கினன் — இறக்கினன் — இறங்கினன் என்பனவற்றுள் க ச ட த ப ற ஒலி மாறுபடுவதை உணரலாம்.

ஆக இவ்வாறே எஃகு — கஃசு — இஃது — பஃறி — கஃறீது —முஃடீது என்பவற்றுள்ளும் கசதறடக்கள் முறையே ha—sa—pha—ra—da என ஒலிக்கின்றன. மெல்லின இடையின எழுத்துக்கள் தம்மைச் சார்ந்து வரும் வல்லினத்தை மெலியவும் குழையவும் செய்வதுபோல நலிபொலியாகி இவ் ஆய்தமும் தான் சார்ந்து நிற்கும் வல்லினத்தை நலிவு படுத்துகின்றது. பிற்காலச் சந்த இலக்கண நூலார் ஆய்தத்தை இடையினத்திற் சேர்த்து இலக்கணங் கூறியதும் இவ்வியல்பு கருதியேயாம்.

மற்று இங்ஙனம் — செங்கல், மஞ்ஞை — மஞ்சள் வண்ணம்—வண்டல், செந்நெல்—பந்தர், செம்மல்—செம்பர் கன்னல்—கன்றல்—எனவரும் சொற்களுள் ஙஞண நமனக்கள் தம்மொடு தாம் வருங்காலும்—வல்லினத்தைச் சார்ந்து வருங்காலும் மிக நுண்ணிதாக ஒலி வேறுபடுவதை உணரலாம் வேறுபடினும் அவை மெல்லெழுத்தாகிய ஓர் ஒலியனாகக் கொள்ளப்படுவதைப் போன்றே வல்லெழுத்தாறனோடும் வரும் ஆய்தம் அவ்வவ் வல்லெழுத்தொலிக் கேற்பச் சிறிது வேறு படினும் ஓரொலியாகக் கொள்வதே முறையும் நேரிதுமாகும். ஆகவே ஆய்தத்தின் ஒலி ஒன்றே என்பதும் அஃதொரு மாற்றொலியன் அன்று என்பதும் தெளிவாம்.

இனி ஆய்தம் ஓர் ஒலியனே என்பதைக் கீழ்வரும் சிலஎடுத்துக்காட்டு வாயலாகத் தெளிவாக உணரலாம்

எஃகு — கருவி	எக்கு — வயிற்றை ஏறப்பண்ணுதல்
கஃசு — ஒரு நிறுத்தலளவை	கச்சு — வார்க்கட்டு
அஃது — சுட்டுப்பெயர்	அத்து — ஒருசாரியை
பஃறி — ஓடம்	பற்றி — வினையெச்சம்
அஃடு — வயிறு	அட்டு—சமைத்து — சமைத்து — கொன்று என்னும் பொருளில் வினையெச்சம்.

மற்று. = கற்றீது — கஃறீது எனவும் முள் = தீது—முட்டீது —முஃடீது எனவும் ஒத்த பொருளில் வருங்கால் மற்றொலியனாகக் கொள்ளலாமே எனின், இவ்வாறு ஒத்த பொருளில் வேறுசில சொற்

களும் வருதலைக் கீழ்க்காணும் எடுத்துக்காட்டுக்களால் தெளியலாம்.

ஞாயிறு — நாயிறு. பிரிவு — பிறிவு, மங்கலம் — மங்களம் ஐந்நூறு — ஐஞ்நூறு — மண்யாத்த — மண்ணாத்த — நான்கு — நால்கு — பந்தல் — பந்தர் — அகம் — அகன் என்பன காண்க. இவற்றுள் சிலவற்றை போலி வகையான் வருவன என இலக்கண நூலார் கூறுவர். எவ்வாறாயினும் இவை ஒன்றற்கொன்று மாற்றொலியன் அன்று என்பது தெளிவு.

எனவே மூட்டது — முஃடது — அஃறிணை பஃறுழிசை—என வருபவை ளகர லகரங்களோடு தகரம் மயங்காமையான் வந்த புணர்ச்சித் திரிபுகளேயன்றி மாற்றொலியனாகும் என மயங்குது பிழையாம் என்க.

இதுகாறும் ஆய்ந்த வகையிவ் சார்பெழுத்துள் ஒன்றாய ஆய்தம் என்னும் இம்முப்பாற்புள்ளி எழுத்து உயிரகரத்தின் சார்பெழுத்தென்பதும்: இஃது இடம் பற்றி ஏனைய இகர உகர ஒலிக் கூறுகளையும் சிறிது பெறும் என்பதும் இகரக்கூறு பெறுங்கால் யகரம் போன்று செவிப்புலனும் என்பதும் நெஞ்சு ஊன்றுமிடமாக மிடற்று வளியால் தோன்றி வாயுறுப்புக்கள் ஒன்றும் செயல்படாத நிலையில் நா நுனி மட்டும் சிறிது மேல் நோக்கி எழ ஒலிக்கும் என்பதும், குற்றெழுத்தின் பின்னும் வல்லெழுத்தின் முன்னும் அவை பற்றுக் கோடாகப் பிறந்தொலிக்கும் என்பதும்—நலிபொலியாய்ச் சுருங்கி ஒலித்தல் இதன் இயல்பென்பதும் அரை மாத்திரை அளவினதாய இது ஒரோவிடத்துக் குறிப்புச் சொற்களில் சிறிது மிக்கொலிக்கும் என்பதும், சில லகார ளகார வகார ஈற்றுவல்லினப் புணர்ச்சியில் வரும் என்பதும், இஃதொரு மாற்றொலியன் அன்று என்பதும் பெறப்படும்.

கடைச்சங்கம் : கால ஆராய்ச்சி

ஒரு புதிய சான்று

பூரண சந்திர ஜீவா (எம்.ஏ.)
அஞ்சல்வழிக் கல்வி
மதுரை - காமராசர் பல்கலைக் கழகம்.

[துணர்-ருச மலர்-ந பக்கம் 74 தொடர்ச்சி]

கிழார் கூறும் விண்மீன் வீழ்ச்சி நோவாதானா : பண்டைத் தமிழகத்து வானியல் மேன்மையுற்றிருந்தது வானில் திகழும் கோள்களின் இயக்கம், விண்மீன்களின் பருவமாற்றம் போன்றவற்றையும். விண்வீழ்கொள்ளி, தூமம், பிற இயல்பற்ற வானிகழ்ச்சிகளை [இயற்கையல்லன செயற்கையிற் தோன்றல் Phenomenan] அவர்கள் அறிவர் தமிழர் விண்மீன்களும், கோள்களும் வேறு வேறானவை என்பதை அறிந்திருந்தனர்.

'நாள்கோள் திங்கள் ஞாயிறு கனையழல் என்று'

என்னும் அடி இதனை உணர்த்தும். [5] தூமங்கள் வானில் புதிதாகத் தோன்றுவதையும் அவர்கள் அறிவர்.

'மைமீன் புகையினும் தூமம் தோன்றினும்'

என்னும் அடியால் இதனை அறியலாம். [6] அது மட்டுமல்ல விண்கற்கள் விழ்வதையும் அவர்கள் அறிவர். விண்மீன் எரிந்து விழுவதாக அவர்கள் பாமரத்தனமாக நம்பவில்லை. விண்கற்கள் விழ்வதை உற்கம் [meteorites] வீழ்தல் என்று குறித்தனர்.

'திசையிரு நான்கும் உற்கம் உற்கவும்'

என்று கோவூர் கிழார் இதனைக் குறிக்கிறார். [7] ஆகவே உற்கம் உற்கல் [விண்கல் வீழ்தல்—எரிநட்சத்திரம்] என்றக் கலைச்சொல்லால் கூறும் அறிவியல் ஆற்றல் இருப்பினும், கூடலூர் கிழார் தம் பாடலில,

'கனையெரி பரப்பக் காலெதிர்பு பொங்கி
ஒருமீன் விழுந்தன்றால் விசும்பினானே'

என்று ஒருமீன் வானத்தே விழுந்தது என்று குறித்தது, தான்கண்ட வானிகழ்ச்சியின் தன்மையை ஐயம் திரிபற அறிந்திருந்ததனால் என்று பெருமிதத்தோடு கூறலாம். அடுத்து இதனை இராசியுடன் இணைத்துக் கூறுவதும் நம் ஐயத்தைப்போக்குகிறது. விண்கொள்ளி விழ்தலைப் பொதுவாகத் திசையுடன் இணைத்து தீயசகுனமாகவே குறிப்பது வழக்கம். ஆனால் விண்மீன் வீழ்ச்சியைமட்டுமே இராசியுடன் இணைத்துக் குறிப்பர். சில இராசிகளில் வீழ்வது அரசக்கு அழிவு என்பர்.

'ஆடுகயறே டனுசிங்கத் தெழுமீன்
விழுமே லரசழி வாம்'

என்பது சோதிடக் கருத்து. எழுமீன் என்றது விண்மீன்களே. அவையே அடிவானில் தோன்றி மேலே எழுந்து மேற்கே மறையும் இயல்புடையன. விண்கற்களே வீழ்நட்சத்திரம் என்பது வழக்கு [8] ஆகவே மேட, மீன, தனு, சிம்ம இராசிகளில் ஒரு விண்மீன் [எழுமீன்] விழுந்ததையே கிழார் தம் பாடலில் குறித்தார் என்று ஐயம் திரிபற நம்பலாம். கிழார் விண்மீன் வீழ்ச்சிபற்றிக் கூறும் விளக்கங்கள் இக்கால அறிவியலார் கூறும் விவரிப்புக்களே ஒத்துள்ளமை நம்மை வியப்படையச் செய்கின்றது. பண். சி. எஸ்ப் பாயல் என்னும் ஆய்வாளர் கூறுகின்றார் :— 'ஒரு விண்மீனின் முழுக் கட்டமைப்பும் துண்டுதுண்டாக வெடித்துச் சிதறுகிறது; அதுமிக ஒளியுடன் எரிந்து, தொடர்ந்து 30 நாட்களுக்குமேல் ஒளிர்ந்த பின்னர், நம் ஞாயிற்றைப்போல் பலகோடி அளவு வெளிச்சத்துடன் வெடித்துச் சிதறி மறைகிறது'

இத்தகைய விண்மீன் வீழ்ச்சிப் பன்னூறு ஆண்டுகளுக்கு ஒரு முறை நேரிடுவதாக அறிவியலார் கூறுகிறார்கள். நமக்குத் தெரிந்த வரலாற்றுக் காலத்தில் இம்மாதிரி மூன்று முறை நடந்துள்ளதாக அறிவிக்கிறார்கள். கி. பி. 1054-இல் முதல் முறையாகச் சீனரால் கண்டு அறிவிக்கப்பட்டது. இதன் ஒளியில் நம் கதிரவனின் ஒளியே அமிழ, இரவு பகல்போல் ஒளியுடையதாயிற்று. இது வெடித்ததாலேயே நாம் காணும் கிராப் நெபுலம் எனும் ஒலிப் படலம் உண்டாயிற்று. அடுத்தது 1572-இல் டேனிசு வானியலார் டைக்கோ பிராஜி என்பவரால் அறியப்பட்டது. மூன்றாவது 1604-ல் செருமன் வானியலார் கெப்லரால் அறியப்பட்டு அறிவிக்கப்பட்டது.

கிழார் கூறும் கருத்துக்கள் இத்தகைய நோவா ஒன்றினையே நம் கண்முன் காட்டுகிறது,

'பாசிச் செல்லா தூசி முன்னு
தளக்கர்த்திணை விளக்காகக்
கனையெரி பரப்பக் காலெதிர்பு பொங்கி
ஒருமீன் விழுந்தன்றால் விசும்பி னானே'

என்கிறார். 'கடலாற் சூழப்பட்ட பூமிக்கு விளக்காக முழங்கா நின்ற தீப்பரக்கக் காற்றாற் பிதிர்ந்து கிளர்ந்து ஒருமீன் வானத்தே விழுந்தது' என்று பொருள் கூறுவர். இரவு பகலைப்போல் ஒளியுடையதாயிற்று என்று கிழார் இந்தப் பாடலில் கூறுகிறார்.

அடுத்து உலகிற்கு விளக்காக என்று கூறும்போதே அது நீடித்து ஒளிதந்ததை நாம் உணர்கிறோம். அதுமட்டுமல்ல சுடர் ஒளி பரப்பக் காற்றிற் பிதிர்ந்து கிளர்ந்து பொங்கியது என்றக் கருத்தில், அந்த விண்மீன் ஒருபுறம் ஒளிப்பெருக்குடன் பொங்கித் தோன்றியது என்றும் தெரிகிறது.

இது சீனர் கூறும் hvi—hsing—துடைப்ப விண்மீன் - என்னும் கருத்துக்கு விளக்கமாகிறது. விண்மீனில் உள்ள வாயுக்கள் பொங்கி எரிந்தபோது ஒரு வால்போல் தோன்றி இருக்கவேண்டும். இதைக்கண்டே சீனர் அதைத் துடைப்ப அமைப்புடைய விண்மீன் என்றும் குறித்தனராதல் வேண்டும். சீனரது கருத்துக்குக் கிழாரது பாடலே விளக்கமாகிறது. ஆகவே பேராசிரியர் சி. எஃப். பாவல் மற்றும் அறிவியலார் நோவாபற்றிக் கூறும் விளக்கங்களைக் கிழாருடைய பாடலுடன் நோக்கக் கிழார் காட்டுவது ஒரு நோவாவே என்று அறிகிறோம். விண்கற்கள் ஒளியுடன் பாய்ந்து செல்லும் இயல்புடையவையே என்றாலும் அளக்கர்த்திணை விளக்காக - கடல் சூழ் உலகிற்கு விளக்காக நிலவும் தன்மை உடையன அல்ல. ஒரு சில விநாடிகளில் தோன்றி மறையும் தன்மையுடையவை. அடுத்தவர்களுக்கு எடுத்துரைக்கவும் இயலாத அளவு விரைவுடன் எரிந்து விழும். ஆனால் கிழார் விளக்கென நீடித்த ஒளியைக் காட்டுவார். மேலும்,

'ஒருமீன் விழுந்தன்றால் விசும்பி னானே
அதுகண் டியாமும் பிறரும் பல்வே றிரவலர்
பிறையிசை யருவி நன்னாட்டுப் பொருநன்
நோயில னாயி னன்றுமற் றில்லென'

வருந்தினேம் என்கிறார். கிழாரும், பிறரும், பல்வேறு இடங்களில் உள்ள இரவலர்களும் கண்டு வருந்தினார்கள். சாதாரண விண்கற்களைக் கண்டு இப்படி வருந்த இயலாது. கிழார் பாடல் இவ் வானிகழ்ச்சி பலரும் கண்ட ஒரு தொடர் நிகழ்ச்சியாகக் காட்டுகிறது இன்றும் தூமங்களைக் காணும் பலரும் இவ்வாறே வருந்துகிறார்கள்! ஆகவே அக்காலத்தில் வானிகழ்ச்சிகளைக் கண்டு ஆயும் பல்வேறு வானியல் குழுக்கள் (கணிகள்) இருந்தமையை நாம் அறிகிறோம். சீனர்போல் இக்குழுக்கள் வானால் குறிப்புக்களை நமக்காக விட்டுச் செல்லாதது நம் நற்பேறின்மையே

திசை விளக்கம் :— விண்மீன் எரிந்தபடி நகர்ந்து சென்ற திசையினைக் கிழார் குறிக்கிறார். அந்த நோவா சுடர்ந்து அழிந்து மறைந்தபோது தெற்கில் இருந்ததாகக் கிழார் குறிப்பாக உணர்த்துகிறார்,

'பாசிச் செல்லர் தூசி முன்னு'

என்கிறார். 'கீழ்த்திசையிற் போகாது வடதிசையுற் போகாது' என்று இதற்குப் பொருள் கூறுவர். 'நற்றிசையாகிய கிழக்கும் வடக்கும் செல்லாது தீத்திசையாகியத் தெற்கும் மேற்குமாகிய இரண்டனுள் ஒரு திசைக்கண் வீழ்ந்ததென்றும் ஆம் என்று இதனை மேலும் விளக்குவர்.

கிழார் குறிக்கும் நேரத்தில் மேற்கே விழுந்திருப்பின் அது இரவு முழுவதும் காணப்பட்டிருக்கவேண்டும். மாலையில் தோன்றி இருப்பின் பின்னிரவில் மேற்கே காணப்படும். ஆனால் கிழார்,

'ஆடிய லழற்குட்டத்
தாரிரு ளரையிரவில்'

என்கிறார். நடு இரவு ஆரிருள் உடைத்தாய் இருந்தது. எனவே நடு இரவுக்குப் பிறகே அது தோன்றி உலகிற்கு விளக்காக விளங்கி இருக்க வேண்டும். ஆகவே மேற்கை நீக்கிவிடுவோம். கிழக்கை முதலிற்கூறி அதன் பக்கத் திசையாம் வடக்கையும் கூறி இரண்டி டத்தும் செல்லாது எனவே, கிழக்கின் இன்னொரு பக்கத் திசையாம் தெற்கே சென்றது என்று கொள்ள வேண்டும். இதனல் மேற்கில் இருந்து கிழக்கிலே போகிறது என்று பொருள் கொண்டுவிடக் கூடாது என்று பாசிச் செல்லா (கிழக்கே செல்லாது) என்றும், கிழக்கே இருந்து வடக்கே செல்லவில்லை என்பதை உணர்த்த (ஊசி முன்னுது — வடக்கே செல்லாது — அடையாது) என்றும் கூறினர். ஆகவே கிழக்கில் இருந்து தெற்கே சென்று அடைவ தாயிற்று என்பது தர்க்கத்தால் பெறப்படும்.

இத்தகைய வானியல் போக்கு மகர இராசிக்கு மட்டுமே உண்டு. கிழக்கின் தென்கோடியில் தோன்றி, சிலமணி நேரங் களுக்குப் பிறகு நடுவானில் இருக்கும்போது தெற்கே இருப்பது போல் தோன்றும் மகர இராசியே நடு இரவில் [அரையிரவு] உதயமாகிறது. ஆகவே கிழக்கே தோன்றி மேற்கே போகும் அந்த இராசி மண்டிலத்துடன் நேரவா நகர்ந்து சென்றது என்று கிழார் குறிப்பாக உணர்த்தினர். தெற்குத் திசை காலனுக்கு உரியது என்பது தமிழர் வழக்கு. ஆகவே பண் கிளர்க் கூறும் கிழக்கே தோன்றி, தெற்கே எரிந்து வீழ்ந்தது என்று கிழார் கூற்றால் அறிகிறோம்.

காணப்பட்ட இராசி :— வானியல் அடிப்படையில் விண்மீன் காணப்பட்டது மகர இராசியில் என்று கிழார் குறிப்பாய் உணர்த்து கிறார். மேலும் கிழக்குத் திசையின் தென்கொடியைத் தெற்கு

என்பது தமிழர் வழக்கம். சீனர் குறித்தபடி மகர இராசியில் கதிரவன் நிலவும் காலத்தில் நோவா காணப்பட்டது என்று பண். கிளர்க் கூறுகிறார். அக்காலம் திசம்பர் 21 முதல் சனவரி 19 வரையாம். இது மகர இராசிக் காலம். அக்காலத்து மகர இராசி இரவு 1-30 மணியளவில் [கதிரவன் உதயத்துக்கு $4\frac{1}{2}$ மணி நேரம் முன்பாக] கிழக்கு வானில் [பெத்லகேம் கிழக்கு] தோன்றும் என்பது வானியல். அதாவது கதிரவன் அப்போது மகர இராசியில் நிலவுகிறான் [சரியாக திசம்பர் 21-ஆம் தேதி]. கதிரவன் அப்போது கிழக்கின் தென் கோடியில் காணப்படும் என்பதைத் தமிழ் வானியலும் ஏற்கிறது.

'இன்நிலா முன்றிலின் இளவெயில் நுகர
விரிகதிர் மண்டிலம் தெற்கேர்பு வெண்மழை
அரிதிற் றோன்றும் அச்சிரக் காலையும் [9]

என்பது இளங்கோவடிகளின் கூற்று [அச்சிரக் காலை — முன்பனிக் காலம் — மார்கழி, தை மாதங்கள்] தெற்கே நிலவும் என்பது கிழக்கின் தென்கோடி என்னும் பொருளிலேயே. கூடலூர் கிழாரும் தெற்கு என்று குறிப்பாக உணர்த்தியது கிழக்கின் தென்கோடியையே இரவு 1-30 மணியளவில் தோன்றுகிறது. இதை பண். கிளர்க் குறிக்கிறார். கிழாரும் ஆரிருள் அரையிரவு என்று இதையே குறித்தார். தெற்கே விழுந்தது என்ற சொற்களால் கிழார் நுணுக்கமாக மகர இராசித் திக்கை உணர்த்திவிடுகிறார். இளங்கோவடிகள் மகர இராசியில் கதிரவன் நிலவும் காலத்தையும், அதன் வானவழிப் பாதையைத் தெற்கு என்னும் சொல்லாலும் குறிக்கிறார் என்பதை உற்று நோக்கினல்தான் கிழாருடையக் கருத்தை நுணுக்கமாக உணர முடியும் [அறிவியல் கணிப்பின்படி திசம்பர் — சனவரி மகர இராசியில் கதிரவன் நிலவும் காலம் என்பதே அடிகள் முன் பனி காலத்தில் [மார்கழி — தை] கதிரவன் தெற்கே நிலவுகிறான் என்று கூறியதும் ஆம். 'தெற்கேர்பு' என்பது மகர இராசிப்பாதை என்பதையேயாம்].

ஆனல் கிழார் 'ஆடியல் அழற்குட்டத்து' என்கிறாரே என்ற ஐயம் தோன்றலாம். நாம் முதலிலேயே ஒன்றை புரிந்துகொள்ள வேண்டும். சீனரும். பண். கிளார்க்கும் நோவா தோன்றிய இராசியைக் குறிக்க [மகர இராசி], கிழார் அது வீழ்ந்து அழிந்த இராசியைக் கூறுகிறார். குழந்தை பிறந்ததும் இராசி குறிப்பது போல் நோவா அழிந்த நேரத்து இராசியைக் குறிக்கிறார் கிழார். அது மேட இராசியாகும். நோவா மகர இராசியுடனே இணைந்து கடைசிவரைக், காணப்பட சோதிட முறைப்படி கிழார் குறித்ததே மேட இராசி

"ஆடிய வழற்சுட்டக்
தாரிரு ளரையிரவி"

என்கிருர். [மதிவழியளவைப்படி] மேட இராசியுடன் கூடிய கார்த்தி கையின் முதற்காலில் விழுந்தது என்கிருர். பண், கிளர்க்கும், சீனரும் மகர இராசியில் தோன்றியது என்பது ஞாயிறுவழியளவைப் படி. அம்முறைப்படி பங்குனியில் விழுந்தபோது கதிரவன் நிற்பதும் மேட இராசிதான் [Aries] என்பது இங்கே கருதத்தக்கதாம் [ஆங்கில — ஞாயிறு வழியளவைப்படி]. கதிரவன் மகரத்தில் இருந்து நகர்ந்து இக்காலத்தில் [மார்ச் 21 முதல ஏப்ரல் 19 வரை பங்குனி] மேட இராசியை அடைகிருன் ஞாயிறு வழியளவைப் படியும் இராசி பொருந்தி வருகின்றது. எனவே கிழார் குறிப்பாக உணர்த்தியவாறு நோவா மகர இராசியுடன் தோன்றி, மேட இராசிக் காலத்து விழுந்தது என்றும் கொள்ள வேண்டும்.

காணப்பட்ட நாட்கள் :— சீனர் நோவா 70 நாட்கள் காணப் பட்டது என்று குறிக்கிருர்கள். பங்குனி முதல் பதினைந்து நாட் களில் விழுந்தது என்பதன்றி கிழார் வேறு ஏதும் கூறவில்லை, ஆனல் இராசிபற்றி அவர் கூறுவது இந்த ஐயத்தையும் போக்கு கின்றது. தமிழர் முறைப்படி வானியல் ஞாயிறுவழி — மதிவழி இருமுறையாலும் குறிக்கப்படும் மகரத்தில் ஞாயிறு நிற்பது தை மாதத்தில் ஆகும் (இளங்கோவடிகளும் குறிக்கிருர்), ஆகவே தை-மாசி-பங்குனியின் முதற் பதினைந்து நாட்கள் என்றுக் கணக்கிட்டால் (தை 29 நாள் + மாசி 30 + பங்குனி 11 = 70) ஏறக்குறைய 70 நாட்கள் வருகின்றன. ஆங்கில முறைப்படி திசம்பர் 21 தொடங்கி ஏப்ரல் 7 வரை நாட்கணக்குகள் பொருத்தமாக இல்லை (ஏறக்குறைய 108 நாட்கள் கணக்கில் வருகின்றன) தமிழ் முறைப் படியே 70 நாட்கள் என்ற சீனரின் கணக்குப் பொருத்தமாக உள்ளது. ஆகவே பங்குனியின் முதற் பதினைந்துவி என்பது (பொதுவகையால்) பங்குனி 11 - ஆம் தேதி விழுந்தது என்று கொள்ள ஏதுவாகிறது ஆகவே சீனர் குறிம்பின்படி பங்குனி 11 என்பது ஏப்ரல் 7-ஆம் தேதி ஆகும் (ஆனல் ஆங்கிலக் கணக்கின் படி ஏப்ரல் 7 வரை 70 நாள் என்பது சனவரி 28-தேதி தொடக் கமாகும் இது மகர இராசிக் காலமல்ல. இம்முரண்பாடு ஆங்கில நாட்காட்டியைக் குறித்த மாறுபரட்டரல் நேர்ந்தது - நாட்கணக்கு கள் வழக்கில் உள்ள முறைகளைத் தழுவியவை) இதனல் சீனர் முறையின்படியானக் குறிப்புகள் தமிழ் முறையுடன் மட்டுமே பொருந்தி வருதலை உணரலாம். இதனல் பண். கிளர்க் பொது வகையாலேயே இக்கால முறைகளைக் குறிப்பதாகக் கொள்ள வேண்டும்.

காணப்பட்டப் பருவம்:— சீனர் கி. மு. 7இல் வசந்தக்காலத்தில் கண்டதாகக் குறித்துள்ளமையை பண், கிளர்க் எடுத்துரைக்கிருர். ஆனால் மகர ராசிக் காலம் எனபதோ ஆங்கில முறைப்படி மழைக் காலம் ஆகும் (திசம்பர்—ஜனவரி—பிப்ரவரி மாதங்கள்) சீனரோ அது வசந்தக்காலத்தில் 70 நாட்கள் நிலவியதாகக் குறிக்கிகிறனர். (வசந்த காலம் மார்ச்சு—ஏப்ரல்—மே மாதங்கள்) இங்கும் கிழாரது விளக்கமே சீன வானியலாரின் கருத்துடன் ஒப்புடையதாக உள்ளது.

"முடப்பனையத்து வேர்முதலாக்
கடைக்குளத்துக் கயங்காயப்
பங்குனியுய ரழுவத்து"

விழுந்தது என்கிருர் கிழார். பங்குனி மாத முதற் பதினைந்துள் என்று அவர் குறிக்கும் காலம் ஏப்ரல் முதற் பதினைந்து நாளுள் அடங்கு கிறது. ஏப்ரல் என்பது வசந்த காலத்துள் அடங்கும் (மார்ச்சு—ஏப்ரல்—மே மாதங்கள் வசந்தகாலம்.

தமிழில் பின்பனிக் காலம், பனியின் திவீரம் குறைந்து, வெயி லின் உக்கிரம் தோன்றும் காலம். சீனவில் வடக்கு — வடகிழக்கே இருந்து வீசும் கொடிய பனிக்காற்றின் தீவிரம் குறையும் காலமும் இதுவே தமிழகம்—சீன ஆகிய நாடுகளுக்கு இது இனியதாம் பருவ காலமே ஆகவே கிழார் கூற்றும் சீனருடைய வசந்தகாலத்தில் விண் மீன் காணப்பட்டது என்னும் கருத்தை வலிவுடையதாக்குகின்றது.

விழுந்த நேரம் :— சீன ஏடுகளை ஆய்ந்த பண், கிளர்க் விண் மீன் கதிரவன் உதயத்திற்கு 4½ மணி நேரத்துக்கு முன்பு தோன்றி இருக்கும் என்கிருர். அதாவது 1-30 மணி நடுஇரவில் தோன்றி இருக்கும் என்பது அவர் கருத்து. கிழாரும் இதை உறுதி செய்கிருர்.

"ஆடிய லழற்குட்டத்
தாரிரு ளரையிரவில்"

என்கிருர்' மேட இராசி கார்த்திகை மீனின் முதற் காலோடு கூடிய இருள் நிறைந்த நடுஇரவு என்பது இதன் பொருள். அவர் கூறும் நாள் இரவு இருளுடையதாகவே இருந்திருக்கும், ஏனெனில் பங்குனி மாதம் கார்த்திகை நாள் அன்று பூர்வ சஷ்டியாகும். முன் னிரவு நிலவு மறைந்து இரவு இருளுடையதாக இருக்கும் என்பது வாணியல். ஆகவே இருள் நிலவியது. ஆனல் அது விழுந்ததாகக் கூறுகின்ற நேரம்.

" தலைநாண்மீன் னிலைதிரிய
நிலைநாண்மீ னதனெதி ரேர்தரத்
தொன்னாண்மீன் றுறைபடிய "

என்று விளக்குகிறார் கிழார். "உச்சமாகிய உத்திரமீன் உச்சியில் இருந்து சாய, அதற்கு எட்டாம் மீனாகிய மூலம் அதற்கெதிரே எழா நிற்க, உத்திரத்துக்கு முன் சொல்லப்பட்ட எட்டாம் மீனாகிய மிருகசீரிடம் துறையிடத்துத் தாழ" என்பது உரை. மாலையில் உதயமான மீன் காலை மேற்கே மறைகிறது. அப்போது உச்சியில் இருக்கும் மீன் 8வது மீன். அந்த மீனை நகர—அப்போது கிழக்கே மேலெழும் மீன் உதயமீன் எனப்படும்.

" உச்சிமீனுக்கு எட்டாமீ னுதயமீன் "

என்பது வானியல். அன்று பகலில் நிலவப்போகும் மீன் (உதயமீன்) 'நிலைநாண்மீன்' எனப்பட்டது. பிறகு கதிரவன் உதயமாகிறது. ஆகவே விடிமீன் தோன்றிய நேரத்து விண்மீன் விழுந்தது என்று தெரிகிறது. இது ஏசுவைக் காண விண்மீனைத் தொடர்ந்து சென்ற கீழ்த்திசை அறிஞர்கள் அதிகாலையில் அம்மீனின் இயக்கம் நின்ற போது ஏசுவைக் கண்டார்கள் என்ற மாத்யூவின் கருத்தை உறுதி செய்கிறது (ஏசுவின பிறப்புண்மையைப்பற்றிய ஆய்வு இங்கே தேவையற்றது). இதனால் நோவாவின் வீழ்ச்சியைக் கிழார் நுணுக்கமாக ஆய்ந்தறிந்திருந்தமை அறியலாம்.

தொகுப்பு :— சீன வானியலார் கூறும் நோவாவின் அமைப்பு, அது நிலவிய 70 நாள் கணக்கு, பருவகாலம், இராசி, நேரம், திசை இவையாவும் கூடலூர் கிழார் கூற்றுடன் பொருத்தமாகவே அமைகிறது. அரேபிய வானியலார் நோவாவின் தோற்றம் பற்றிக் கணித்து ஏசுவின் பிறப்பை அறிந்தது போல், கிழார் அதன் அழிவு நோக்கி நேரம் அறிந்து இராசியைக் கணித்து மாந்தரஞ் சேரலின் இறப்புக் காலத்தை நமக்கு உணர்த்துகிறார். இச்செய்திகளால் அரேபிய — சீன — தமிழக வானியலாரின் நோவாவைப்பற்றியக் கருத்துண்மையை அறிய முடிகிறது.

மாந்தரஞ் சேரல் காலம்: மேற்கண்ட செய்திகள் அடிப்படையில் கிழார் குறிக்கும் நோவாவையே ஹான் பரம்பரையைச் சேர்ந்த சீன வானியலார் குறித்தனர் என்று ஏற்று, மாந்தரஞ் சேரலுடையக் காலத்தைக் கணிக்கலாம். நோவா கி. மு. 7 ஆம் ஆண்டு வசந்தகாலத்தில் அதாவது பங்குனி 11 ஆம் தேதிக்குச் சமமான நாளில் (கார்த்திகை நாள் — பூர்வ சஷ்டி தினம்) விழுந்தது. இப் பங்குனி மாதம் கார்த்திகைநாள் என்பது ஏப்ரல் 7ஆம் தேதியாகும், ஆகவே கி. மு. 7 இல் ஏப்ரல் 7 ஆம் நாள் விழுந்த பின் 7 நாள் கழித்து மாந்தரஞ் சேரல் இறந்தான். ஆகவே ஏப்ரல் 14இல் (பங்குனி 18) இறந்தான் என்று கொள்ளலாம்.

இவன் 30 ஆண்டுகள் ஆண்டதாகக்கொண்டால் கி. மு. 37இல் அரசெய்தி இருக்கலாம். அவ்வாறே நிறைவாழ்வினனுகிய இவன் 60 ஆண்டு வாழ்ந்தவன் என்று கொண்டால் கி.மு. 67 இல் பிறந்தவன் எனலாம். இவனது நெருங்கிய உறவினர்களான செல்வக் கடுங்கோ வாழி யாதன், பெருஞ்சேரல் இரும்பொறை (தகடூர் எறிந்தவன்) மகன் இளஞ்சேரல் இரும்பொறை ஆகியோரைக் குறிக்கும் புகளூர்த் தமிழ்கல்வெட்டு ஏசுவின், சமகாலத்தைச் சேர்ந்தது என்றும் ஆய்வாளர் கருத்தும், 10 சான்றோர். மறைமலை அடிகளார் ஆய்ந்து செல்வக்கடுங்கோவின் காலம் கி. மு. 36 என்று நியமித்ததும் (கயவாகு மன்னனுடையக் கால அடிப்படையில் பிறகு கி. பி. 22 என்று மாற்றினர்கள்) 11 மேற்கண்ட காலத்துக்கு ஏறக்குறைய ஒப்புவது தெரிகிறது. இவர்களுடையக் கருத்துக்கள் பிறரைப்போல் மாந்தாரஞ் சேரல் கி. பி. 210இல் வாழ்ந்தவன் 12 என்று தவருகக் காட்டியமை நம் ஆய்வுக்கு வலுவூட்டுகிறது.

ஆகவே, மேற்கண்ட ஆய்வில் கொள்ளப்பட்டக் காலத்தை அடிப்படையாகக்கொண்டு நாம் சங்க காலத்தின் அரசர்களுடையக் காலத்தை அமைக்கலாம். இதனை சாத்தியமாக்கிக் கூடலூர் கிழார், அரேபியா—சீன வானியலார் ஆகியோருக்கும், மேற்கண்ட நோவா உண்மையை வெளிப்படுத்திய பண். கிளர்க்குக்கும் நம் நன்றியறிதல் உரித்தாகும்.

அடிக்குறிப்புகள் :

1 சிலப்பதிகாரம் — கட்டுரைக்காதை — இளங்கோவடிகள்
2. புறநானூறு — கூடலூர் கிழார் — பாடல் 229 — இப்பாடல் உரை, உரை விளக்கம் போன்றவை உ. வே. சா. புறநானூற்றுப்பதிப்பில் காணப்படுபவையாம்.
3. இவ்விளக்கம் தமிழ்ச் சோதிடம் —பரிபாடல் நல்லந்துவனர் (11) பாடல் அடிப்படையில் தொகுக்கப்பட்டது
4. Sunday Standard — was christ Born in January — Ashok Row Kavi — Jan 6 1980.
5. பதிற்றுப்பத்து — 2ஆம் பத்து —மேட்டூர்க் கண்ணனர்.
6. புறநானூறு — கபிலர் — பாடல் 117
7. புறநானூறு — கோவூர் கிழார் — பாடல் 41.
8. பூமியும் கிரகங்களும் எப்படி தோன்றின — பரீஸ் வேவின் - பக் 127
9. சிலப்பதிகாரம் — ஊர்காண் கதை — இளங்கோவடிகள்.
10 கல்வெட்டியல் — பண். இரா. நாகசாமி — 71.
11. மாணிக்கவாசகர் வரலாறும் காலமும் — மறைமலையடிகள்— குறிப்பு — பக் 494.
12. தென்னிந்திய வரலாறு-நீலகண்ட சாஸ்திரி கே. ஏ-பக் 197

மங்கல மடந்தை - கண்ணகி

சி. கோ. தெய்வநாயகம், M.A., M.Phil., B.Sc.,
Dip-in-Agri, Cert-in-Epi, Cert-in-Ling.

[துணர்: ௫௪ மலர்: ௩ பக்கம் 65 தொடர்ச்சி]

பகுதி: 1

3: 0

கனாத்திறமுரைத்த காதையில் எவ்வாறு தன் எண்ணப்படியே, கோவலனைத் திரும்பப் பெற்றாரோ அதேபோல கட்டுரைக் காதையில் கோவலனைக் கண்ணகியார் திரும்பவும் பெறுகிறார்.

3: 1

முதலிற் பிரிந்து பின் கூடி மதுரை சென்று கோவலனை இழந்து அலமரும் நிலை பெற்றார். பிறகு கட்டுரை காதையில் அதாவது தேவ வாழ்வியல் நிலையில் கூடும் பொழுதோ பிரியா நிலை பெற்று வாழ்வாங்கு வாழுஞ் சிறப்புப் பெற்றார்.

4: 0

முன்னர் மாதவியின்பால் கொண்ட மையலினால் பிரிந்திருந்த கோவலனை மறுமுறையும் விரைவில் கூடுதற்கான சோம குண்டம், சூரிய குண்டம், மூழ்கி, காமவேள் கோட்டம் தொழுது பெறும் வாய்ப்பிருந்தும் அது பீடன்று என இருந்தார்.

கோவலன் இறந்தபிறகு உரைக்கும் சூளில் "காதற் கணவனைக் காண்பேனே ஈதொன்று, தீதறு நல்வார்த்தைக் கேட்பேனே ஈதொன்று" எனக்கூறி இழந்த, இறந்து போன தன் கணவனை உயிருடன் காணும் தன் கற்புத்திண்மையினை எடுத்தியம்பினும், காய் சினந்தணிந்தன்றிக் கணவனைக் கை கூடேன் எனக் கூறி மேலும் அவலங்கொண்டழிவலோ? எனக் கூறி தன் நிலையிலேயே செயற்படத் துவங்கி மதுரைக்கு நீதிபுகட்டுகின்றாரே யொழிய அவாவினால் ஆசைக் கணவனைக் கூடினாரல்ல.

4: 1

மாதவிபால் கோவலன் தங்கி, தன்னைப் பிரிவுத் துயரால் வருத்தியபோது, தேவந்தி கூறிய வழிகளில் அவாமீக்கூற தானே முயன்று கோவலனைத் தனக்குரியவனாக்குவது கற்புடைய தனக்குப் பீடன்று என்றார் கண்ணகியார். எனவேதான் கனாத்திற முரைத்த காதையில் குற்றிளையாள் ஒருத்தி வந்து கோவலன் கண்ணகியைத்

தேடி வந்துள்ளமையினை அறிவிப்பதாக அடிகள் செப்புகிறார். அதே போன்றுதான் கட்டுரைக் காதையிலும், பதிகத்திலும், காட்சிக் காதையிலும் கண்ணகி மதுரையில் இழந்த கோவலனை, நெடுவேன் குன்றத்தின் மீது இந்திரனே வந்து கண்ணகியார்க்குச் சுட்டிக்காட்டிப் பின் அவரை குன்றக் குறவர் காண விண்ணுலகிற்கு அழைத்துச் சென்றனன் எனக் கூறுவர் அடிகள். இதனை

அமரர்க் கரசன் தமர்வந்தீண்டிக்
காதற் கொழுநனைக் காட்டி அவளோடு
எங்கட் புலங்காண விட்புலம் போயது''

(காட்சிக் கதை)

எனும் தொடர்களும் பதிக, கட்டுரைக் காதை யடிகளும் விளக்குகின்றன. இஃதன்றோ கற்புக்கடம். மாதற்குக் கற்பிக்கும் தடம்

5: 0

கோவலன் மாதவிபாற் சென்றவிடத்து கண்ணகியார் மங்கலப் பெண்ணாகவே தோற்றமளித்தார். ஆயின் சற்றே உடல் மாசுற்றாராக இலங்கினார். அதனையொத்தே கோவலனை மதுரையில் இழந்த பிறகும் சிறிது மாசுற்ற மெய்யளாக, ஆனால் கையற்ற நெஞ்சளாயல்ல; தன் கணவனை மீண்டும் பெறுவோம் என்ற உறுதியுடையராகவே நெடுவேள் குன்று செல்கிறார்.

6: 0

மாதவியிடமிருந்து கோவலன் தன்பால் திரும்பிவருவான் என்பதனைக் கண்ணகியார்க்கு ஒரு கனவு உணர்த்திற்று. அதுபோன்றே கொலைபட்ட கோவலனைக் கண்ணகியார் இறுதியில் பெறுவார் என்பதனை அவரேயறிவார்' ஆனாலுங்கூட மதுரை மாதெய்வமும்

''வாரொலி கூந்தல் நின் மணமகன் தன்னை
ஈரேழ் நாளகத் தெல்லை நீங்கி
வானோர் வடிவிற் காண்ட லல்லது
ஈனோர் வடிவிற் காண்டலில்லென''

(23: 172—176)

மாபத்தினிக் குணர்த்துகின்றது.

''மாதர்த் தகைய மடவார்கண் முன்னரே
காதற் கணவனை காண்பேனே'' —(19:9-10)

எனுந்தொடர்களும் கண்ணகியாரின் வெற்றியைப் புலப்படுத்துகின்றன.

7: 0

கனாத்திற முரைத்த காதை வரை தானே கோவலனை வலிந்து பெற முயற்சித்தல் தமக்குப் 'பீடன்று' என இருந்த கண்ணகியார்க்கு, எண்ணிய எண்ணியாங் கெய்தப்பெற, அவர் கோவலனுடன் கூடி கணவன்—மனைவியாகவே, அதாவது மங்கலப் பெண்ணாகவே மதுரை மாநகர் புக்கார். அதேபோன்று மதுரையழலூட்டி தன் கணவனுற்ற பழிச்சொல்லைத் தீர்த்த கண்ணகியார் நெடுவேள் குன்றத்து கணவனைப் பெற்ற நிலையில் மங்கலப் பெண்ணாகவே தெய்வ உலகம் புகுந்தார்.

மாதவியால் கோவலன் பிரிந்திருந்ததுபோன்றே பாண்டியனால் பிரிந்திருக்கிறான் கண்ணகியாரை. புகார்க் காண்டத்தில் மாதவியால் பிரிந்திருந்த கோவலன் ஏழுகாதையளவு (அரங்கேற்றுக் காதை முதல் – கனாத்திற முறைத்த காதை வரை) கண்ணகியாரைவிட்டுப் பிரிந்திருந்து பின் கூடுகிறான்; அவன் பிரிவு சங்ககாலத் தலைவர்களது பரத்தமைப் பிரிவினை ஒத்தேயுள்ளது. அதாவது தற்காலிகப் பிரிவே. அதனையொத்தே ஏழுகாதையளவிற்கு மதுரைக் காண்டத்தில் கோவலன் கண்ணகியாரை விட்டுப் பிரிந்து (பாண்டியனால் கொலைப்பட்டு) இறுதியில் அவருடன் வந்து கூடுகின்றான் (கொலைக்களக் காதை முதலாக கட்டுரை காதை ஈறாக) எனவே இவண் காணப் பெறும் பிரிவும் தற்காலிகப் பிரிவாகவே அடிகளால் சுட்டப்பட்டதறிக. எனவே எத்திறத்தானும் கண்ணகியார் கோவலனை முற்றிலுமிழந்ததாக அடிகள் தங்காப்பியத்தில் சுட்டவே இல்லை என்பதறிக. சங்ககாலத் தமிழக ஒழுக்கமாகிய குறுங்காலப் பிரிவுற்ற மங்கலப் பெண்ணாகவே கண்ணகியாரை அடிகள் குறித்துச் செல்கிறார்.

8: 1

எனவே கண்ணகியார் தம் வாழ்வில் இரு முறை தன் கணவன் கோவலனின் பிரிவை உடையராயிருக்கின்றார். மாதவிபாற் பிரிந்தமைக்குக் காரணம் தன் தவறுதான் என்பதனைக் கோவலனே

" யானுளன் கலங்கி யாவது மறியேன் " (23 : 62)

என ஒப்புக்கொள்கின்றான், மதுரையில் பிரிந்தமை பாண்டியன் தவறால்.

8: 2

கணவன் செய்த தவற்றை, தனக்கிழைத்த அநீதியினை அமைதியாக ஏற்றுக்கொண்ட பொற்புடைத் தெய்வம், கணவனுக்கும் பாண்டியனால் இழைக்கப்பட்ட அநீதியினைத்தாளாது வீரமா பத்தினியாயிற்று.

8: 3

தன் துன்பங்களை ஒரு பொருட்டாக மதியாத அவர் தன் கணவன் உற்ற துன்பமறிந்து. "மன்பதை பழிதூற்ற மன்னவன் தவறிழைப்ப அன்பனை இழந்தேன் யான் அவலங் கொண்டழிவலோ?" (18: 36-37

எனக்கூறி தன் கணவனுற்ற பழிச்சொல்லை வழக்காடித் தீர்த்து கணவனொடு கூடிய நிலையில் மங்கலதேவியாக உம்பருலகு புகுகின்றார்.

8: 4

இம் மனப்பான்மையினை கவுந்தியடிகள்

"என்னொடு போந்த இளங்கொடி நங்கைதன்
வண்ணச் சீறடி மண்மகள் அறிந்திலள்
கடுங்கதிர் வெம்மையிற் காதலன் தனக்கு
நடுங்கு துயர் எய்தி நாப்புலர வாடி
தன்துயர் காணா தலைசால் பூங்கொடி"

(15: 137-141)

எனக் கூறுகிறார்.

தன் துன்பங்களைப் பொருட்படுத்தாது தன் கணவனுறும் சிறு துன்பத்தினையும் பொறுத்துக் கொள்ளாது, நீக்கவிழையும் மனைவியன்றோ உண்மை மனைவி? அவளன்றோ "இன்துணை மகளிர்க்கின் றியமையா கற்புக்கடம் பூண்ட பொற்புடைத் தெய்வம்"? (15: 138-149)

9: 0

பரத்தைமை ஒழுக்கத்தால் தனக்குத் துன்பம் செய்த கோவலன் 'எழுக' எனக்கூறியவுடயேயே கணவற் சொற்பிழையாது அவனுடன் சென்று மகிழ்ந்த மனவியல்பும், பாண்டியனால் கோவலன் கொலைபட்டான் என்பதறிந்து. ஏனைய பெண்டிர்போல் கைம்மை நோயுற்று அழியாது. வீரமா பத்தினியாகி கணவன்மீது சுமத்தப்பெற்ற பழிச் சொல்லைத் துடைத்த பெருமையும், கணவனை, பிரிவிற்குப்பின் தனையடையும் பீடும் கண்ணகியாரையன்றி வேறெவர்க்கு வாய்க்கும்?

9: 1

"தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்"

என வள்ளுவர் குறித்த மங்கலப் பெண்ணிலக்கணத்திற்கன்றோ இளங்கோவடிகள் கண்ணகியாரை நாயகியாராகக் கொண்டு காவியம் படைத்துள்ளார். (தொடரும்)